1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, திட்டத்தினுடைய மதிப்பீடு 24.60 லட்சம் ரூபாய். வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. எத்தனை ஆயக்கட்டு என்ற விவரம் இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் நீண்டகாலமாக அருப்புக்கோட்டை தாலுகா மக்களால் பல முறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக இந்தத் தாலுகாவில் மக்கள் விவசாயத்தில் இருக்கிற காரணத்தினால் நீர்ப்பாசன சம்பந்தமாக 20 கண்மாய்களுக்கு மேல் இருக்கின்றன. ஒரு போக நீர்ப்பாசனத்திற்கு உதவியாக இதை விரைவில் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பிட்ட கால வரையறை நிர்ணயித்து அந்தக் கால வரையறைக்குள் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நீரியல் விவரங்களை முடிவுசெய்த பிறகு கவுண்ட நதியில் அணை கட்டும் திட்டம் தேவையென்று சொன்னால் சென்னம்பட்டியில் அணை கட்டும் வேலை செயல் படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Bridge across the river Chinnar.

* 18. *Q.*—Thiru V. Isvarmurti: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to build a bridge across the river Chinnar in Hogenakkal area; and

(*b*) if so, the details thereof?

சின்னாற்றுக்குக் குறுக்கே பாலம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஒகனேக்கல் பகுதியில் சின்னாற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையிலுள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS